**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 51/2018**

DW1 – திருமதி.சரண்யா நாள். 25.11.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்··········ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. எனது கணவருக்கு பூர்வீக ஊர் எது என்றால் செங்குடி. எனது மாமனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 பெண்குழந்தைகள் மற்றும் 1 ஆண். எனது மாமனார் பெயரில் எத்தனை சொத்துக்கள் உள்ளது என்றால் 1 ஏக்கர் புஞ்சை நிலம் மற்றும் வீடு உள்ளது. எனது மாமனார் எப்போது இறந்தார் என்றால் நான் திருமணமாகி வருவதற்கு முன்பே இறந்துவிட்டார். எனது கணவர் பெயரில் எவ்வளவு சொத்துக்கள் உளளது என்றால் எனது மாமனார் பெயரில் இருந்த சொத்துக்கள் எனது கணவர் பெயரில் மாறி உள்ளது. எனது கணவர் சுயமாக ஏதேனும் சொத்து வாங்கி உள்ளாரா என்றால் வாங்கி உளளார் அதில் வீடு கட்டி உள்ளோம்.

2. வழக்கில் சொல்லி உள்ள சொத்து விபரம் சரிதானா என்றால் சரிதான். எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் சொத்து விலைக்கு கேட்டு தராததால் தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தானது அவர்களுக்கு பாத்தியப்பட்டது என சொல்லி தாக்கல் செய்துள்ளார். எப்போது வாதி தாவா சொத்தை எங்களிடம் விலைக்கு கேட்டார் என்பதை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள்

சொத்தை விலைக்கு கேட்டு தராததால் தாக்கல் செய்துள்ளார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமானது நிலம இல்லாத ஏழைகளுக்கு கொடுக்கப்படுவது என்றால் சரிதான், நாங்கள் அச்சொத்தை அனுபவம் செய்ததால் கொடுத்தார்கள். அனுபவத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பட்டா வா.சா.ஆ.1 இல்லை என்றால் அதைப்பற்றி தெரியாது.

3. வா.சா.ஆ.1 ஆவணம் வழங்குவதற்கு முன்பு நாங்கள் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்ததற்கு எதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான ஆவணங்கள் எங்களிடம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் நிபந்தனையாக கொடுக்கப்பட்ட நிலமானது பயன்படுத்தபடவில்லை என்றால் அது ரத்து செய்யப்படும் என்றால் 16. 12.2017 அன்று வீடு கட்டுவதற்கான பணிகள் அந்நிலத்தில் ஆரம்பிக்கபட்டது அதன் பின்னிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பணிகள் நடைபெறவில்லை.

**(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)**

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை